Registered as a Newspaper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 301

யாழ்ப்பாணம் கார்த்திகை 22 ஜூலை 1 வெள்ளிக்கிழமை (8-12-72)

சீமந்துக் கட்டுக்கற்கள்
புது வீடு கட்ட விரும்பும்
முன்னேற்ற வீரர்களே!
சீமந்து வாங்கச் சிரமப்படவேண்டாம். சேல்மார் மலைரத் தேற மாதக்கணக்கில் அலையவேண்டாம். நீங்கள் கல்லறை-கும் தொழில் நுட்பம் புதிதாகக் கற்றிடத் தேவையில்லை.
உங்களுக்குத் தேவையான சகல விதக் கட்டிடக் கற்களையும், சீமந்து வேலைப்பாட்டுக் கிறில்களையும் இயந்திரங்களைக் கொண்டு எமது பட்டறைகளில் சிறு செலவில் பெற்றுக் கொள்ளலாம்
'மயிற்' தாபனம்.
138, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி — யாழ்ப்பாணம்

UNDERGRADUATE LIBRARY * JAFFNA COLLEGE *
7 DEC 1972

சபாநாயகர் திடீர் அறிவிப்பு

பத்திரிகை மன்ற மசோதா சபையில் விவாதிக்கப்படும்

அண்ணா தி.மு.க. கம்யூனிஸ்ட் காங்கிரஸ் கட்சிகள்

சட்டசபைக் கூட்டத் தொடரை முற்றாகப் பகிஷ்கரிப்பர்!

சென்னை, டிச 7 தமிழ்நாடு சட்டசபையின் இந்தக் கூட்டத் தொடரை முற்றாகவே பகிஷ்கரிப்பதென்று அண்ணா தி. மு. க., பாரத கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் கட்சி ஆகிய மூன்று எதிர்க்கட்சிகளும் முடிவுசெய்துள்ளன. ஸ்தாபன காங்கிரசும் சுதந்திரக் கட்சியும் சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுவருகின்றன.

தமிழ்நாடு அமைச்சரவை மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் பற்றி விசாரிக்க கமிஷன் ஒன்று நியமிக்கவேண்டும் என்ற எதிர்க்கட்சியினரின் கோரிக்கையை தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணாநிதி இன்று நிராகரித்தார். இப்படியான கமிஷனை மத்திய அரசுதான் நியமிக்க முடியும் என்று அவர் வாதிட்டார்.

குற்றச்சாட்டுகளைக் கூறுவோர்கள் அவைகளைப் பகிரங்கமாகக் கூறட்டும் என்று முதல்வர் சவால் விட்டார். பத்திரிகைகளுக்கு அவை அனுப்பப்பட்டும் பிரசுரிக்கப்படவில்லையென்றால் துண்டுப்பிரசுரமாக அவைகளை வெளியிடட்டும். நாங்கள் வழக்குத்தொடர்வோம். விசாரணை தானே ஆரம்பமாகிவிடும் என்றார் திரு. கருணாநிதி.

சட்டசபையில் அவர் தாக்கல் செய்துள்ள அரசு மீது நம்பிக்கைதெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதம் நடைபெற்றது.

இத் தீர்மானம் விவாதிக்கப்படுவதற்கு எதிர்க்கட்சியினர் தெரிவித்த ஆட்சேபனையை உபசபாநாயகர் திரு சீனிவாசன் நிராகரித்தார்.

அரசின் மீது அவநம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையொன்று ஏற்கனவே இருக்கும்போது நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையொன்று எப்படி விவாதிக்கப்படலாம் என்று எதிர்க்கட்சியினர் கேட்டனர்.

அவநம்பிக்கைத் தீர்மானத்தைக் கண்டு நாம் அஞ்சவில்லை. குற்றம் கூறுபவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிப்பதற்கு எமது தீர்மானம் ஒரு வாய்ப்பளிப்பதாக இருக்கும் என்றார் அவர்.

சபாநாயகர் திரு மதியழகன் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்திருக்கிறார். இந்த நிலையில் சட்டசபை நடைபெறுவது சரிதானா என்று எதிர்க்கட்சியினர் கேட்டனர். சட்டசபை கூட்டத்துக்கும் நீதிமன்ற விசாரணைக்கும் சம்பந்தமே இல்லையென்று சட்டமந்திரி திரு மாதவன் தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பு உரிய காலத்தில் கிடைக்கவில்லை

கொழும்பு, வியாழன்

பத்திரிகை மன்ற மசோதா இனி தேசிய அரசுப்பேரவையில் விவாதிக்கப்படும். இத்தகவலை இன்று காலையில் சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்ன தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார்.

பத்திரிகை மன்ற மசோதாவுக்கும் நாட்டின் அரசியல் சட்டத்துக்குமிடையில் பிணக்கு முரண்பாடுகள் சம்பந்தமாக விசாரணை நடத்தி அரசியல் அமைப்பு நீதிமன்றம் உரிய காலத்தில் தனது முடிவுகளை அறிவிக்காது போனதினால் அரசியல் சட்டத்தின் 9-வது அத்தியாயத்துக்கும் சபையின் நிரந்தர விதிகளுக்கும் அமைய பத்திரிகைமன்ற மசோதாவை சபை விவாதிக்கும் என்று சபாநாயகர் கூறினார்.

பத்திரிகை மன்ற மசோதாவுக்கும் அரசியல்சட்டத்துக்குமிடையில் சில முரண்பாடுகள் இருப்பதாக நவம்பர் 13-ம் திகதி அரசியல் அமைப்பு நீதிமன்றம் அறிவித்தது. அதுபற்றி ஆராய்ந்து முடிவை அறிவிக்கும்படி நீதிமன்றத்திடம் அன்றைய தினமே நான் கேட்டுக்கொண்டேன். அரசியல் சட்டத்தின் 65-வது பிரிவின்படி இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றம் தனது முடிவை அறிவிக்கவேண்டும். ஆனால் இதுவரைக்கும் அதன் முடிவு கிடைக்கவில்லையென்று சபாநாயகர் கூறினார்.

இதன்பின் பத்திரிகை மன்ற மசோதாவின் இரண்டாம் வாசிப்பு கூடிய விரைவில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று சபைமுதல்வர் திரு மைத்திரிபால சேனநாயக்கா அறிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த முடிவுகுறித்து எதிர்க்கட்சியினர் சபைமண்டபத்தில் இன்று கூடி ஆலோசனை நடத்தினர்கள். அரசியலமைப்பு நீதிமன்றத்தின் முன்

5-ம் பக்கம் பார்க்க

குருநகரில் இன்றுமுதல் ஊரடங்கு நீக்கம்!

யாழ்ப்பாணம், வெள்ளி குருநகர் பகுதியில் இன்று முதல் ஊரடங்கு முற்றாக நீக்கப்படுமென்றும், அதேநேரத்தில் அமைதி நிலவும் இச்சமயம் யாராவது குழப்பம் செய்ய முயற்சித்தால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வட பகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர் சுந்தரலிங்கம் நேற்றுத் தெரிவித்தார். ஊரடங்கு நீக்குவதன் மூலம் கடந்த மூன்று மாதங்களாக இப்பகுதி மக்கள் அனுபவித்து வந்த கஷ்டங்கள் நீங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்பகுதியில் குடிபெயர்ந்து சென்ற குடும்பங்களில் இதுவரை 55 குடும்பங்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்கு வந்து குடியேறியிருப்பதாகவும் பொலிஸ் அதிபர் மேலும் தெரிவித்தார். பொலிஸ் அதிபர் நேற்று அப்பகுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டார்.

பாக். ரோடில் மிகுதியாக உள்ள 5 வீடுகளிலும் ராஜேந்திர வீதியில் 2 வீடு

(5-ம் பக்கம் பார்க்க)

தமிழில் நீதிமன்ற விசாரணை மசோதா ஜனவரியில் வரும்

கொழும்பு, வியாழன்

வடக்கு கிழக்கு பகுதி நீதிமன்றங்களில் தமிழில் விசாரணை செய்வதற்கான மசோதா வருகிற ஜனவரியில் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இத் தகவலை நீதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தேசிய அரசுப் பேரவையில் நேற்று தெரிவித்தார்.

இம் மசோதா தயாரித்து அநேகமாக முடிவுறும் நிலையில் இருப்பதாகக் கூறிய நீதி அமைச்சர் என்னவானாலும் நான் இந்த மசோதாவை அச்சிட்டுக் கொண்டு வருவேன் என்று சொன்னார்.

நீதி அமைச்சின் செலவினங்களை பேரவை கமிட்டி நிலையில் நேற்று ஆராய்ந்தது. இதில் பேசுகையிலேயே அமைச்சர் பீலிக்ஸ் இவ்வாறு அறிவித்தார். வடக்குகிழக்கு நீதிமன்றங்களில் தமிழில் அலுவல்களைச் செய்வதற்கான மசோதா தயாரித்து அநேகமாக முடிவுறும் நிலையிலிருப்பதாகவும் அடுத்தவருட ஆரம்பத்தில் அதாவது ஜனவரி மாதத்தில் மசோதாவைப் பேரவையில் சமர்ப்பிக்க முடியுமென்றும் கூறினார்.

உறுப்பினர்களின் சொத்து உடைமைகளைப் பிரகடனப்படுத்துவதற்கான மசோதாவும் விரைவில் கொண்டுவரப்படுமென்றும் அவர் சொன்னார். மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்களாக மாற்ற உத்தேசிக்கப்படும் கிராம நீதிமன்றங்களுக்கு சிங்களத்திலும் தமிழிலும் தேர்ச்சி பெற்றவர்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படுவார்களென்றும் அமைச்சர் கூறினார்.

டிக்காகான் - மானெக்ஷா சந்திப்பு வெற்றி

புதுடில்லி, டிச 7 காஷ்மீரில் புதிய எல்லைக்கோட்டு வரைவதில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டை நீங்கியுள்ளது.

இது சம்பந்தமாக லாகூரில் இன்று கூடிப் பேசிய இந்திய ராணுவத்தளபதி ஜெனரல் மானெக்ஷாவும், பாகிஸ்தான் ராணுவத்தளபதி ஜெனரல் டிக்காகானும் இணக்கமான ஒரு முடிவுக்கு வந்துள்ளார்கள்.

இதன்படி இருநாட்டு ராணுவத் தளபதிகள் இம்மாதம் 11-ம் திகதி கூடி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவார்கள். இந்த உடன்பாடு கைச்சாத்தான பிறகு இருதரப்பு துருப்புகளும் எல்லைப்பகுதிகளிலிருந்து விலக்கிக்கொள்ளப்படும்.

பரஸ்பரம் திருப்தியளிக்கும் விதத்தில் பிரச்னை தீர்க்கப்பட்டுள்ளதாக ஜெனரல் மானெக்ஷா கூறியுள்ளார்.

வெல்லி சினிமா
([illegible])
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு பி.ப 2-30
எம் ஜி.ஆர்-சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

Daily at 4-30 p. m Only
OPERATION
WHITE SHARK

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15 &
9-15 p.m.
Jake Nicalsons
in
FIVE EASY PIECES

நியூ [illegible]
இணுவில்
தினசரி 6-30 இரவு 10-00
சனி ஞாயிறு பி ப 2-30
ஆனந்தன்
நடித்த
விஜயபுரி வீரன்
[சண்டைகள் நிறைந்த
சிறந்த படம்]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
KILL THEM ALL AND
COME BACK ALONE
முழு நீள சண்டைப்
படம் [சினிமாஸ் கோப்]

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — ஜெயலலிதா
வி.கே.ராமசாமி -M.R.R.வாசு
நடித்த
பட்டிக்காடா பட்டணமா

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30
பி.ப2-30 இரவு6-15, 9-30
★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா
அசோகன் நடித்த
நீரும் நெருப்பும்
(புதிய கொப்பி)

6 வது வெற்றி வாரம்
வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 2-30, மாலை 6-30,
இரவு 10-00 சனி, ஞாயிறு 10-30.
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெய்சங்கர் ★ வாணிஸ்ரீ
★ நம்பியார் ★ நாகேஷ்
மற்றும் பலர்
நடித்த
குலமா
குணமா

லிடோ
(யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சன்ஜே, சாதனா, பல்ராஜ்
ரகினி
நடித்த
எக் பூல்
தோ மாலி
(EK PHOOL DO MALI)
[ஹிந்தி கலர்]

வின்ஸர் —யாழ்ப்பாணம்
காட்சி நேரங்கள் மாற்றப்பட்டுள்ளன.
காலை 10-30, பிற்பகல் 2-15, மாலை 6-00, இரவு 9-30
★ ஜெமினி ★ காஞ்சனா ★ முத்துராமன்
★ பாரதி ★ சுந்தரராஜன் ★ ராகவன்
நடித்த
சித்திராலயா அளிக்கும்—ஸ்ரீதரின்
அவளுக்கென்று ஓர் மனம்
ரசிகர்களின் விருப்பத்திற்கிணங்க மேலும் 2 தினங்கள் காண்பிக்கப்படும்

வரி விளம்பரம்

விற்பனைக்கு

பத்திக் டையிங் (Battik Dyes) சில்லறை பாசல் 4 அவுன்ஸ் பைக்கற்றுகளில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வசந்தா வஸ்திராலயம், இல. 20, மக்கள் நவீனசந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம். 4463

200 முட்டை பொரிக்கக் கூடிய அடைப்பொறி [Rex Incubator] மண்ணெண்ணெயில் இயங்குவது. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். ஆ. சிவராஜன், மிருக உணவு மருந்துச்சாலை, 11, தம்பனை வீதி, பருத்தித்துறை. 4525

EL 5255 சோமசெற் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் கீழ்வரும் விலாசத்தாருடன் தொடர்புகொள்ளவும். பாலராசா, 163, கோவில் வீதி, நல்லூர். 4529

நயினாதீவு கோவிலுக்கு மேற்குப் பக்கமாக வசிகின்காடு என்னும் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மொத்தமாகவும் பிரித்தும் கொடுக்கப்படும். விண்ணப்ப இல. 4526. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

4528

மானிப்பாய் பெண்கள் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் மெயின்வீதி ஓரத்தில் கிணற்று வசதியுடன் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: க. நவரத்தினம், 5, முருகமலை ஒழுங்கை, மானிப்பாய்.

4530

தேவைக்கு விசேஷ மலிவு விலை 8-12-72 தொடக்கம் 31-12-72 வரை பல் முழு செற் ஒன்று (மேல் வாய் கீழ் வாய்) ரூபா நூறுக்கு 100/- செய்து கொடுக்கப்படும். நவீன விஞ்ஞான முறை பயின்ற எமது மெக்கானிக்குடைய திறமான வேலைசெய்து தரப்படும்: Rock Bottom Price Ruppes 100/- one full set for a few day only. P. I. வெர்ணண்டோ [பல் கட்டுபவர் கண்ணாடி வியாபாரி] 51, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 4526

தேவை

நெசவு வேலையில் தேர்ச்சியும் நிர்வாகத் திறமையுமுள்ள பெண் ஒருவரும் மற்றும் நெசவும் பயிற்சியுள்ள பெண்களும் பயிற்சி பெற விரும்பும் பெண்களும் நேரில் விண்ணப்பிக்கவும். விக்னேஸ்வரா ரெக்ஸ் வர்க்ஸ், மின்சாரநிலைய வீதி. (பஸ் நிலையமுன்பாக) யாழ்ப்பாணம். 4527

சாந்தி சங்கானை
தினசரி 6-15, இரவு 9-30
ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்.
நடித்த
மர்மயோகி

Daily 4-15 p. m. only
Sunday at 10-30 a. m.
Antonio Sabato
in
HATE FOR HATE

வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம் வெள்ளி

வடஇலங்கை சங்கீதசபையினர் ஆதரவில் இவ்வாண்டு நடைபெற்ற சங்கீதப் பரீட்சை முடிவுகள் வருமாறு:

0 இவ்வடையாளம் சாதாரண பரீட்சையில் விசேட சித்தியைக் குறிக்கும்.

S இவ்வடையாளம் செயல்முறைப் பரீட்சையில் விசேடசித்தியைக் குறிக்கும்.

[நேற்றைய தொடர்ச்சி]

யாழ்ப்பாணம்

இரண்டாம் பகுதி: சாதாரண சித்தி

வத்சலா செல்லையா, சோமசுந்தரம் பண்டிதநாதன், சந்திரா வந்தகிருஷ்ணன், உருத்திராபதி, அமிர்தகௌரி இராசரத்தினம், மனோகரி வைரத்தினம், சௌமினை சந்தி, சிதம்பரநாதன் [மேலதிகபாடம்] [வயலின்] கமலாதேவி சுப்பிரமணியம், [வயலின்] விஜயலக்ஷ்மி நாகலிங்கம் [வயலின்], சிவகுமாரன் விசுவநாதன், சாந்தி இராஜ்குமார், 0 நிருமலா விஜயசிந்தம்பி, சோதிருபன் சுப்பிரமணியம் சாரதாமலர் லீலா, இலசெருபி சுப்பிரமணியம், சோமகமணி செல்வராசா, வேதிவனி செல்வராசா சிவறஞ்சினி வேலுப்பிள்ளை, சாந்தினி நாகராசா, பகீரதன் அமிர்தலிங்கம், சுதாமதி வர்மநாதன், தர்மவதி விஸ்வநாதன், சாந்தினி வேலாயுதபிள்ளை (மேலதிகபாடம் [வயலின்] நவீன்ராஜ் நடராஜா, இந்திரலக்ஷ்மி சுப்பிரமணியம் [வீணை] வசந்தா நவரத்தினம் வெனி நடராசா, உமா இலங்கநாயகம், ஹம்சானந்தி பாலசிங்கராஜா, இந்திரா நடராசா, வசந்தா திருநாவுக்கரசு, சிறீதனிமா சம்பந்தன், மதி முருகேசம்பிள்ளை, திவ்யலோகினி குருகேசம்பிள்ளை, விக்னேஸ்வரா துரையப்பா, 0 ஜெகதாம்பாள் நிமலவின்சம் ஜுடித் மடேஸ் வரதராணி சின்னராசா,

ஜெயதா ஜெயசீலன், தேவி வேலுப்பிள்ளை, கோவிந்தசாமி [வயலின்] குணசேகரன் தனஞ்ஜெயசிங்கம் [வயலின்], சாந்தா இராஜகுமாரி இராசரத்தினம் (மேலதிகபாடம்) (வயலின்) இராணி செல்லத்துரை, கலைமதி இராமலிங்கம், செல்வினி திருச்செல்வம் [மேலதிகபாடம்] [வயலின்]

இரண்டாம் பிரிவு: சோமபால், குமுதகலா சோமலிங்கம்.

சாதாரண சித்தி: சுசீலா சோமலிங்கம், நித்தியதேவி சின்னத்துரை, முருகதாஸ் நாகலிங்கம், சுதாமினி இராசகோபால் இராசமணி கந்தசாமி.

முதலாம்பிரிவு தெல்லிப்பழை, S அருள்மணிநாதன் சுப்பிரமணியம், 0 செல்வராணி வயிரவபிள்ளை S விமலரோஜினி இரத்தினசிங்கம் (வயலின்), 0 பவளநிதி சபாபதி.

தெல்லிப்பழை

முதலாம்பிரிவு

0 ராஜினி இராமலிங்க ஐயர். 0 சுஜாதேவி செல்லத்துரை. 0 செல்வராணி செல்லத்துரை.

இரண்டாம்பிரிவு.

வயலின்

பத்மராணி இலகராசா இலேனேஸ்வரி பொன்னையா 0 கசிலாதேவி நவரத்தினம், செல்வராணி நடராஜா 0 இலசோதி பொன்னையா 0 கமலகுண் பொன்னம்பலம் 0 மாலினி சேனாதிராசா 0 செல்வராணி நாகராசா 0 கமலாமணி தெய்வேந்திரன், ஜெயந்தினி திலகம்பலம் 0 சிவசக்தி சிவப்பிரகாசம்.

கௌசல்யா ஐம்புகேசவராக்குமான் [வயலின்] [illegible]

தெல்லிப்பழை

சாதாரண சித்தி

சண்முகவடிவேல் சுசீலாதேவி கதிர்காமநம்பி சபாநாதன் நாகமணி வசந்தா செகராஜசிங்கம் [மேலதிக பாடம், வயலின்] தயாநிதி இன்பதம்பி பரமதயாளினி தங்கவடிவேல் இரவிணாபதி சபாரத்தினம், சுவாமிபிள்ளை தம்பையா [மேலதிகபாடம் வயலின்] குமாரசன் இலநேசன், தர்மகுலசிங்கம் பொன்னுத்துரை இருபாலினி சுந்தரலிங்கம் ராஜ்குமார் துரைராஜா சாந்தி சின்னத்தம்பி. றவிறு அரசரத்தினம் சிவானி சுப்பிரமணியம், சிவாஜினி

[5-ம் பக்கம் பார்க்க]

கல்வி

London Chamber of Commerce Institute of Book-Keepers: G. C. E. (A. L) பரீட்சைகளுக்குக் கணக்கியலும் வர்த்தகமும்; தமிழிலும் ஆங்கிலத்திலும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும். L. C. C. பரீட்சைக்கு இறுதித் திகதி 8-12-72 விண்ணப்பிப்பதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படும். விபரம் கல்லூரி அம்பிகை ராஜன், 5, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (அடைக்கலமாதா கோவிலுக்கு அருகில்)

4520

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
VALDEZ IS COMING
(Color)

RIO (Jaffna)
Daily 4-45 7-15, 9-45
Sat & Sunday 10-30 a.m.
Douglas Fairbanks Jr
in
THE CORSICAN
BROTHERS

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சிவாஜி-சாவித்திரி
நடித்த
படித்தால்மட்டும்
போதுமா

வானொலி

வெள்ளி 8-12-72

(செய்திகள்: காலை 6-30 மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-00 நாதாஞ்சலி. 6-05 வைகறைச்சிந்தனை — செ. அம்பிகைபாகன், 6-10 இஸ்லாமிய நற்சிந்தனை 6-15 பாமாலை, 6-40 அறிவிப்புகள், 6-50 பிறந்தநாள் வாழ்த்து, 7-00 இசைமுறைப் பாடல்கள்-கி எஸ் மனோகரன், 7-30 மாவட்டச் செய்திகள், 7-35 [illegible] சேவை. 8-00 மனோன்மணி-ஆன் 8-15 இஸ்லாமிய கீதம்

மாலை 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம வாழ்வு 6-30 பக்திப்பாடல்கள்- திருக்கோவூர்த் திருப்பதிகங்கள் 7-30 உலகச்செய்திகள் 7-35 முத்திநெறி 'திருவெம்பாவை'- செ. சண்முகசுந்தரம் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-10 செய்தியின் பின்னணியில் 9-15 அறிவிப்புகள்- வாத்திய இசை 9-30 உள்ளக் கடிதம் 9-40 தமிழ்ப்பிரசங்கம் "ஆறுமுகநாவலர் நினைவுத் துணைவர்-" ஆர். வடிவேல்

அப்பலோ - 17 அம்புலிக்கு புறப்பட்டது!

மனிதன் இறங்கும் இறுதி யாத்திரை

ஹூஸ்டன் டிச. 7

'அப்பலோ 17' இன்று காலை செலுத்து முனையில் இருந்து அம்புலியை நோக்கி குறிப்பிட்ட நேரத்துக்கு இரண்டரை மணி நேரம் தாமதித்துப் புறப்பட்டது. இலங்கை நேரப்படி சரியாக காலை 11-08 மணிக்குப் புறப்பட்டது.

அப்பலோ-17 இன்று இரண்டரை மணிநேரம் தாமதித்து தனது பயணத்தை ஆரம்பித்தது. ஏற்கனவே காலை 8-38 மணிக்குப் புறப்படுவதாக இருந்தது. ஆனால் உயிர்காப்பு டாங்கு செயல்படாத காரணத்தைத் தொடர்ந்து இந்த இரண்டரை மணி நேரம் தாமதம் ஏற்பட்டது.

அமெரிக்க சந்திரத் தரையில் மனிதன் இறங்கும் இறுதியாத்திரை இதுவாகும். அமெரிக்கா முதல் தடவையாக இம்முறை இரவு நேரத்தில் அம்புலிப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

சந்திரனை நோக்கி 6வது தடவையாக இப்பயணத்தை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப்பயணத்தைக் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான மக்கள் இரவென்றும் பாராது கடும் குளிரையும் பொருட்படுத்தாது கேப் கெனடியில் திரண்டிருந்து அப்பலோ கலத்தை செலுத்தும் வீரர்களான எவான்ஸ், ஸ்மித், சேர்னன் ஆகியோரை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வழியனுப்பி வைத்தனர். கடந்த அம்புலிப் பயணங்களின் போதிலும் பார்க்க இம்முறை இந்த இறுதி யாத்திரையைக் காண ஏராளமானோர் கூடியிருந்தனர். கேப் கெனடியில் மாத்திரமன்றி கியூபாவின் தலைநகரான ஹவானாவிலும் ஆயிரக்கணக்கானோர் கூடி நின்று அப்பலோ 17 புறப்பட்டதைக் கண்டு மகிழ்ந்தனர். அப்பலோ 17 இரவில் புறப்பட்டதால் இம்முறை ஹவானாவிலும் இருந்த மக்கள் பிரயாணத்தைப் பார்க்கக் கூடியதாகவிருந்தது.

வீரர்களான இயூஜின் சேர்னன், ஹரிசன் ஸ்மித், ரொனால்ட் எவான்ஸ் ஆகியோரைச் சுமந்து செல்லும் அப்பலோ 17 விண்வெளிக் கப்பல் 10-ம் திகதி சந்திர மண்டலத்தைச் சமீபிக்கும் என அப்பலோ விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 11-ம் திகதி இவ்விண்வெளிக் கப்பலின் நிலவாகனம் சந்திரத்தரையில் இறங்கும்.

75 மணித்தியாலம் செலவிடுவர்

சந்திரத்தரையில் இறங்கி சுமார் 75 மணித்தியாலத்தை சேர்னனும் ஹரிசனும் அங்கு செலவிடுவர். இவர்கள் இருவரும் தரையில் உலாவுவதற்கும் சந்திரத்தரையின் வெவ்வேறு தன்மை நிலைகள், மண்வளம் ஆகியவற்றை ஆராய்வதற்கும் சுற்றிப் பார்ப்பதற்கும் இந்த 75 மணித்தியாலங்களில் 21 மணித்தியாலங்களைச் செலவிடுவார்கள்.

பல புதிய அம்சங்கள்

அமெரிக்கா ஏற்கனவே மேற்கொண்ட அம்புலிப் பயணங்களில் மேற்கொள்ளாத பல புதிய அம்சங்களை இம்முறை இந்த இறுதிப்பயணத்தில் புகுத்தியுள்ளது. பயணம் இரவில் ஆரம்பிக்கப்பட்டது மட்டுமன்றி சந்திரத்தரையில் செலுத்த பற்றறியில் இயங்கும் சந்திரக் கார் ஒன்றையும் அப்பலோ 17-ன் பயணிகள் இம்முறை எடுத்துச் செல்கின்றனர். புதிய ஆராய்ச்சிக் கருவிகள் பலவற்றையும் அப்பலோ 17 சுமந்து செல்கிறது. முன்னைய பயணங்களில் இத்தகைய சந்திரக்கார் செலுத்தப்படவில்லை. ஏற்கனவே மேற்கொண்ட பயணங்களிலும் பார்க்க 13 நாட்களைப் பிடிக்கும் இந்தப் பயணம் மிக நீண்டதாகும்.

தமிழக சட்ட சபையில் கூச்சலும் குழப்பமும்

சென்னை, டிச. 7

தமிழ்நாடு சட்டசபையில் நேற்று சில நிமிடநேரங்கள் கூச்சலும் குழப்பமுமாக இருந்தது. ஆளுங்கட்சி அங்கத்தினரும், எதிர்க்கட்சி அங்கத்தினரும் முட்டிமோதி இப்படி கூச்சலும் குழப்பமும் ஏற்படுத்தினர்.

கடந்த 2-ம் திகதி சட்டசபையில் நடந்த சம்பவங்கள் குறித்து மத்திய அரசு ஏதாவது தகவல் தரும்படி கேட்டுள்ளதா? என்று சுதந்திராக்கட்சித் தலைவர் டாக்டர் ஹண்டே கேட்டார்.

அப்படி மத்திய அரசு தகவல் கேட்டால் அன்று நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் அனுப்பப்படுமா என்று டாக்டர் ஹண்டே கேட்டபோது, ஆளும் கட்சித்தரப்பிலிருந்து பெரும் கூச்சல் எழுந்தது.

"அன்று இருசபைகள் நடந்தன" என்ற கருத்துப்பட டாக்டர் ஹண்டே சொன்னபோது, "ஒரு சபை மட்டும் தான் நடந்தது. ஒருசபை மட்டுமே நடந்தது" என்று ஆளும் கட்சி அங்கத்தினர் கூச்சலிட்டனர்.

இதே சமயம், எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தும் கூச்சல் எழுந்தது. இதனையடுத்து சபையில் குழப்பம் ஆரம்பித்தது.

இருதரப்பிலிருந்தும் காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன.

டாக்டர் ஹண்டே முதல்வரது கருத்துக்களை வலியுறுத்தாது பேசிக்கொண்டிருந்தார். அந்நேரம் முதல்வர், "நாங்கள் டாக்டர் ஹண்டே பேசுவதை பொறுமையாகக் கேட்கிறோம். அதேபோன்று நாம் பேசுவதையும் அவர் கேட்க வேண்டும்" என்று கூறினார்.

சுதந்திரா-ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தபிறகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தகவல் ஒன்றை வெளியிட்டார்.

2-ம் திகதி சம்பவங்கள்

கடந்த 2-ம் திகதி சம்பவங்கள் குறித்து தகவல் தரும்படி மத்திய அரசு கேட்டிருப்பதாக அவர் சபையில் தெரிவித்தார்.

மத்திய அரசு அதிகாரி ஒருவர் தொலைபேசி மூலம் அன்றைய தினம் நடந்த முழுச் சம்பவங்கள் பற்றி தகவல் தரும்படி மாநில அதிகாரிகளை தொலைபேசியில் கேட்டிருப்பதாகவும் முதல்வர் சொன்னார்.

2-ம் திகதி சம்பவங்கள் சம்பந்தமாக 'அலை ஓசை' நாளிதழ் வெளியிட்ட செய்திகள் சம்பந்தமாக தி.மு.க. உறுப்பினர் திரு. வீரசாமி உரிமைப் பிரச்சினையொன்றையும் எழுப்பினார்.

பாரத — பாக்.

இராணுவத் தலைவர்கள் மீண்டும் சந்திப்பு

புதுடில்லி, டிச. 7

பாரத-பாக் ராணுவத் தலைவர்கள் ஜம்மு காஷ்மீரின் புதிய எல்லைக்கோட்டை வரைவது சம்பந்தமாக 2வது சுற்றுப் பேச்சுவார்த்தையை இன்று லாகூரில் ஆரம்பித்துள்ளனர்.

பாரத ராணுவத் தலைவர் ஜெனரல் மானெக்ஷாவும் பாகிஸ்தான் ராணுவத் தலைவர் ஜெனரல் டிக்காகானும் புதிய எல்லைக் கோட்டை வரைவது குறித்து ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஏற்கனவே நடத்திய பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏதும் காணாததாலேயே இராணுவத் தலைவர்கள் மீண்டும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் இறங்கியுள்ளனர்.

எல்லைக்கோட்டை நிர்ணயிப்பதில் தற்போதுள்ள முட்டுக்கட்டைகளுக்குப் பூரண தீர்வுகாணுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

எப்பகுதியிலும் வேலை செய்ய தயங்கக் கூடாது'

கரவெட்டி, விசே

'ஆசிரியர்கள் ஒரே இடத்தில் இருந்து கற்பிப்பதற்கு நியமிக்கப்பட்டவர்களல்ல. அவர்கள் தேசபிமானத்துடன் நாட்டின் எந்தப்பகுதியிலாவது வேலை செய்யத் தயங்கக்கூடாது.'

இவ்வாறு வதிரி திருஇருதயக் கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களான திருவாளர்கள் வி. கே. சுப்பிரமணியம், எஸ். ஜெகநாதன் ஆகியோருக்கு மாணவர்களால் அளிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தின்போது கல்லூரி அதிபர் திரு. தோமஸ் [illegible] கூறினார்.

திரு. க. விசுவமூர்த்தி, திரு. எஸ். செல்வராசா ஆகியோரும் பேசினர். அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

பெரிய கல்லூரிகளுக்கு முன் உதாரணமாக

கிராமப்புறங்களில் அநேக பாடசாலைகள் உள்ளன"

சாவி, விசே

நகர்ப்பகுதிகளிலுள்ள பெரிய பாடசாலைகள் பலவற்றுக்கும் முன் உதாரணமாக விளங்கக்கூடிய ஏராளமான பாடசாலைகள் கிராமப் பகுதிகளில் இருக்கின்றன என்று கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபால கூறினார்.

[illegible] மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் அவர் பேசினார். சாவி பிராந்திய கல்வி டைரக்டர் திரு. டி. ஜே. நாணயக்கார தலைமை வகித்தார்.

விடுதலைக்காலப் பயிற்சி முறை கடந்த ஆண்டு 6000 பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. சுமார் 600 பாடசாலைகளில் இத்திட்டம் வெற்றி பெற்றுள்ளது என்று திரு. சுமதிபால கூறினார். பொதுமக்களின் பணம் நாட்டின் இரத்தத்திற்குச் சமன். எனவே பொதுமக்கள் அரசிடமிருந்து பல்வேறு விஷயங்களை நாம் எதிர்பார்ப்பது நியாயமே என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் மேல்வரும் கோரிக்கைகளை கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சர் திரு. டி. பி. சுபசிங்காவுக்கும் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமனுக்கும் சமர்ப்பித்துள்ளது.

அட்டை அணிக்கும்முறை பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் சாதாரண தொழிலாளருக்கு மட்டும் நடைமுறையிலுள்ளது. உயர்பதவியிலுள்ள உத்தியோகத்தர்கள் விரும்பிய நேரம் தொழிற்சாலைக்கு வந்து செல்லக்கூடியதாயுள்ளது. எனவே சகல ஊழியருக்கும் அட்டை அணிக்கும் முறை ஒரேவிதமாக ஏற்படுத்தப்படவேண்டும்.

லீவு விண்ணப்பப்பத்திரங்களும் கடன் விண்ணப்பப் பத்திரங்களும் ஆங்கிலத்திலேயே உள்ளன. இவ்விண்ணப்பப்பத்திரங்கள் சிங்கள தமிழ் மொழிகளில் இருக்க வேண்டும்.

குறுகியகால லீவு வசதிகள் சாதாரண தொழிலாளிகளுக்கும் வழங்கப்படவேண்டும்.

அண்மையில் அரசாங்கத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தொழில் மதிப்பீட்டு அறிக்கை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரப்படவேண்டும்.

1967-ம் ஆண்டு முதற்கொண்டு நிலங்கள் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு வழங்கப்பட்ட போதிலும் அவை தொழிலாளர்களின் நிதி நிலைமை காரணமாக குறித்த நோக்கத்தைப் பூர்த்தி செய்யவில்லை. தொழிலாளருக்கான வீடுகள் கட்டுவதற்கு அரசாங்கம் உதவவேண்டும்.

குளோரின் வேலைப்பகுதியில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஆபத்து நிதி உதவி வழங்கப்படவேண்டும்.

போனஸ் சகல ஊழியர்களுக்கும் ஒரே தொகையாக வழங்கப்படவேண்டும்.

(ஈ நி)

மத்தொனி வெற்றி

கரவெட்டி, விசே

நெல்லியடி லெனின் விளையாட்டுக்கழகத்துக்கும் மத்தொனி இளைஞர் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மத்தொனி விளையாட்டுக்கழகம் நெல்லியடி லெனின் கழகத்தை 8-2 கோல்களால் தோற்கடித்

புதிய கிளை

யாழ்ப்பாணம் வெள்ளி

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் இன்று குப்பிழானில் [illegible] புதிய கிளை ஒன்றைத் திறந்துவைக்கவுள்ளனர்.

இன்று காலை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எஸ். நாகலிங்கம் கிளையைத் திறந்துவைப்பார். விழாவுக்கு சங்கத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமை தாங்குவார்.

இலங்கை ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரின்
வல்லாரை பானம்
(ஜீ-கோலா)
தேநீர்-கோப்பிப் பானங்கள் பருகக்கூடாத
நோயாளர்களுக்கு வல்லாரை பானம்
சிறந்த வரப்பிரசாதம்
தனித்தோ, பாலுடனோ- இனிப்புச் சேர்த்தோ
சோடாவிலோ அருந்தலாம்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிரதர்ஸ்
[மருந்துச்சரக்குகள் ஆயுர்வேத மருந்துகள் விற்பனையாளர்]
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

"கண்டக்டர் வாசலில் நின்றால் பிரயாணிகளை காப்பாற்றலாம்"

கைதடி பஸ் விபத்து விசாரணை

மீசாலை, வியாழன்

"பஸ் மணியடிக்கப்பட்டபோது அவலக்குரல் கேட்டது. பஸ் நிற்பாட்டப்பட்டது. பஸ் நின்ற இடத்திலிருந்து சுமார் 35 யார் தூரத்தில் இறந்த மாணவி ரோட்டுக் கரையில் இடப்பக்கமாக விழுந்துகிடந்தார். நிலத்தில் அதிக இரத்தம் இருக்கக் காணப்படவில்லை"

மாணவி ஒருவர் பஸ் விபத்தில் மரணமானதைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் வழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கையில் கைதடி மகாவித்தியாலய ஆசிரியர் ஒருவர் மேற்கண்டவாறு கூறினார்.

கைதடி மகாவித்தியாலயத்தில் கற்றுவந்த நுணாவிலைச் சேர்ந்த சுகிர்தநிதியம் என்ற மாணவி இ. சே. ச. பஸ்வண்டியில் பாடசாலையிலிருந்து வரும்போது பஸ்ஸிலிருந்து மரணமானதைத் தொடர்ந்து பிரஸ்தாப பஸ் சாரதிமீது வழக்குத் தொடரப்பட்டு சாவகச்சேரி நீதவான் திரு. எஸ். சோமநாதன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஆசிரியர் தொடர்ந்து தமது சாட்சியத்தில் கூறியதாவது:

"சம்பவ தினம் குறித்த பஸ்வண்டியில் பாடசாலையிலிருந்து ஏறி நுணாவில் சந்திக்கு வந்தேன். இறந்த பிள்ளையும் அதே பஸ்ஸில் வந்தார். பஸ்வண்டி நாம் ஏறிய இடத்திலிருந்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்கிடையில் ஓரிடமும் நிறுத்தப்படவில்லை.

கைதடிப் பாலம் திருப்பு மூலையில் மணியடிக்கப்பட்டது. பஸ் சாதாரண வேகத்தில் சுமார் 25 மைல் வேகத்தில் வந்துகொண்டிருந்தது. நானும் வேறு சிலரும் இறங்கினோம். அவ்விடம் பஸ் ஓடும்போதும் அதே வேகத்தில் வந்ததா என்பதைக் கவனிக்கவில்லை. பஸ் நிறுத்தப்பட்ட பின்னர் மேற்குறிப்படி இறந்தவர் கிடக்கக் கண்டேன். நிற்பாட்ட முன் பிரேக் போடவில்லை.

மாணவி முழங்காலுக்கு மேல் லவுண் அணிந்திருந்தார். கையில் புத்தகம் வைத்திருந்தார். பஸ்ஸின் கைப்பிடி உலோகத்தால் செய்யப்பட்ட வழுக்கலான பிடி. கூடிய நேரம் பிடிப்பதால் வியர்வை உண்டாகிக் கைப்பிடி தவறியிருக்கும் என்பதைப் பற்றி என்னால் சொல்லமுடியாது. மாணவியின் வீடு விபத்து நடந்த இடத்திலிருந்து 100 யார் தூரமிருக்கும். மாணவியின் வீட்டுக்கும் விபத்து நடந்த இடத்திற்குமிடையில் பஸ் தரிப்பு நிலையம் உண்டு. மணியடித்ததைத் தொடர்ந்து பஸ் சாதாரண முறையில் நிறுத்தப்பட்டது."

இதைத் தொடர்ந்து இறந்த மாணவியுடன் பஸ்ஸில் பிரயாணம்செய்த லோகேஸ்வரி சரவணமுத்து என்ற மாணவி சாட்சியமளித்தார். அவர் தமது சாட்சியத்தில் எனது வீடு இறந்தவளின் பக்க வீடு. இருவரும் ஒன்றாகப் போவதுண்டு. அவள் சென்றவர் விழுமுன் பஸ்ஸில் நடக்கவில்லை. நின்ற இடத்திலிருந்துதான் விழுந்தார். வண்டி பஸ் தரிப்பிடம் போது விரிந்திருந்த சமயம் ஒருவரும் சந்திக்கவில்லை. கண்டக்டர் உள்ளுக்கு நின்றார்" என்றார்.

வெளியான இடத்திற்கு மாற்று விசும்போது முழு பாவாடை காற்றுக்குமேலே எழும்போது அதைத் தடுக்கக் கைப்பிடியை நீங்கள் எடுக்க வேண்டிவருமல்லவா? என்று கேட்கப்பட்டபோது பிரயாணிகள் நெருக்கம் இல்லாதிருந்தால் கஷ்டம் ஏற்பட்டிருக்காது என்று பதிலளித்தார்.

குறித்த பஸ்ஸின் கண்டக்டர் சின்னப்பா சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் எதிரி சாதாரண வேகத்தில் ஓட்டி வந்தாரென்றும் தான் உள்ளுக்கு நிற்கும் பிரயாணிகளிடம் டிக்கற் பணம் வாங்கிக்கொண்டு நின்றதாகவும் தெரிவித்தார்.

அப்போது நீதவான் சாட்சியைப் பார்த்துக் கூறியதாவது:-

"பிரயாணிகள் வாசலில் ஏறும்போதே டிக்கட் கொடுத்துப் பணம் வாங்கிவிடலாம். பிறகு வாசலில் கொண்டுவரும் முறை தவறு. ஏன் வாசலுக்கு முன்போய் இருந்து திரும்பி பிரயாணிகள் கஷ்டங்களைக் கவனிக்கவில்லை. கண்டக்டர்மார் வாசலில் நிற்கவேண்டியது அவர்களது கடமை. அப்படியிருந்தால் பிரயாணிகளைக் காப்பாற்றலாம்.

72-ம் ஆண்டுக்கு முன் பஸ் வண்டியில் ஏறுபவர்களிடம் ஏறிய பின்னும் காசு வாங்கலாம். மிகுதிப் பணம் பிறகுதான் அவர்களுக்குக் கொடுக்கப்படும். இச்சம்பவம் 72-ம் ஆண்டுக்கு முன் நடந்தபடியால் தான் நடந்துகொண்ட முறையில் தவறில்லை என்று கருதுகிறேன் என்று சாட்சி கூறினார். நீதவான் கேஸ் விசாரணையை அடுத்த மாதம் 2-ம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரிக்காக நியாயதுரந்தரர் திரு மு ஆனைசுந்தரம் ஆஜரானார்.

சிங்கள கடிதங்கள்

சுழிபுரம், வியா

சுகாதார இலாகாவில் கடமையாற்றும் திரு சேனை [illegible] வலுக்கு இந்த ஆண்டு இடமாற்றத்திற்காக அனுப்பப்பட்ட கடிதங்கள் யாவும் தனிச் சிங்களத்தில் இடம் பெற்றுள்ளது.

—

பொதுநலநோக்கு அவசியம்

மாவிட்டபுரம், வியா

"பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த முறையில் இயங்கினால் நாடு சுபீட்சமடைவதுடன் சாதாரண மக்களின் அத்தியாவசிய தேவைகளும் பூர்த்தி செய்யப்படும். இச்சங்கங்களின் ஊழியர்கள் பொதுநல நோக்குடன் சங்கத்தைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்."

இவ்வாறு சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு பி நாகலிங்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகள், சேவைகள் ஆகியவை பற்றி இலக்குவர் குழு உறுப்பினர்கள் முன் பேசுகையில் கூறினார்.

• • •

வெள்ளத்தில் உடைந்த நிலையில் தபாற்பெட்டி

கல்வியங்காடு, வியா

நல்லூர்க் கந்தசாமிகோவிலுக்குப் பக்கத்தில் உள்ள பெரிய தபாற்பெட்டி உடைந்த நிலையில் காணப்படுகிறது. இலகுவில் போடப்படும் கடிதங்கள் உடைந்த பகுதியினூடு வெளிவருகின்றன. இதனால் அடிக்கடி தவறுமோ என மக்கள் அஞ்சுகின்றனர்.

மழைகாலத்தில் இப்பகுதியில் வெள்ளம் நிற்பதால் இப்பெட்டியினுள் வெள்ளம் சென்று தபால்களை நனைத்துவிடுகிறது. இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல தடவை முறையிட்டும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் தினமும் நூற்றுக்கணக்கானவர்கள் வந்து திரும்பும் நல்லூரில் உள்ள இத்தபால் பெட்டியின் அவலநிலையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்று இப்பகுதி மக்கள் தபாலமைச்சர் திரு. செ. குமாரசூரியரிடம் கேட்டுள்ளனர்.

இன்று பம்பலப்பிட்டியில் அறிமுக விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

கே. டானியலின் பஞ்சமர் அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. கவிஞர் இ. முருகையன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருவாளர்கள் இ. மௌனகுரு, இ. இரத்தினம், மாவை நித்தியானந்தம், இளங்கீரன், எஸ். வி. தம்பையா, கல்வி அதிபதி இ. லக்ஷ்மண ஐயர், கலாநிதி கா. சிவத்தம்பி, கைலாசபதி, டாக்டர் எம். எஸ். தம்பிராசா, எம். ஏ. நுஃமான் உட்படப் பலர் ஆய்வுரை நிகழ்த்துவர். சில்லையூர் செல்வராசனும் சோமனூர் ராசதுரையும் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வியா

காங்கேசன்துறை இளந் தமிழர் மன்றத்தின் பொதுக் கூட்டம் தலைவர் மா நகேந்திரசீலன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் மா நாகேந்திரசீலன், பொதுச்செயலாளர் நா. குணரத்தினம், கலைத்துறைச் செயலாளர் செ. விவேகானந்தன், விளையாட்டுத் தலைவர் வ இரத்தினசிங்கம், பொருளாளர் கு. பவநாதன், துணைத்தலைவர் ச. சந்திரநாதன், துணைச்செயலாளர் திலகநாதன், கணக்காளர் இ. இலிங்கவேலாயுதம், பரமநாதன், உபகுழுத்தலைவர் த சந்திரமூர்த்தி, உதைபந்தாட்டக் குழுத்தலைவர் மா இராசேந்திரசீலன்.

இன்றைய பலன்

[கார்த்திகை 23-ம் திகதி]

[8—12—72]

மேஷம்- உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள். இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள்.

இடபம்- அண்டைசூழலுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள். சிலருக்கு பொதுசனத் தலைமையும் கிடைக்கலாம்.

மிதுனம்- குடும்பம் இன்று கலகலப்பாக மாறும். இசைத் துறையில் இன்று ஆர்வம் பிறக்கும்.

கடகம்- பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும். இன்று உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

சிம்மம்- அறிஞர்கள் சந்திப்பு இன்று நிகழும். அறவழியில் ஆர்வம் பிறக்கும். ஆக்கப்பணியில் கவனம் செலுத்தவும்.

கன்னி- மன காவல் காத்திருந்த பதவி உயர்வுக்கு வழி கோலப்படும். சிலருக்கு புதிதாக தொழில் கிடைக்கக்கூடும்.

துலாம்- புதுமையான சம்பவங்கள் இடம்பெறும். சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு

விருச்சிகம்- பொருளாதாரத் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும். புதிய முதலீடுகளை இன்று தவிர்க்கவும்.

தனுசு- இன்னலின் பின்னரே இதயம் வேதனைப்படும். வீண்டிய வைத்தியச் செலவு அதிகரிக்கலாம்.

மகரம்- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

கும்பம்- தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். கண்டுபிடிப்பு வேலை நடக்கும். கவனம் செலுத்தவும்.

மீனம்- கனிவான நினைவுகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கலைத்துறையில் வித்தகத் தன்மை தென்படும்.

சோதிடகலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


FOLIDOL-E 605
Concentrated spraying agent for control of pests in all agricultural crops.
Antidote: Atropine Sulphate or PAM
16 fl. ozs.

பொலிடோல் ஈ 605

பயிர்களைச் செழிக்கவும்
விளைச்சலைப் பெருக்கவும்
பொலிடோல் பாவியுங்கள்.

பொலிடோல் E 605 நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய் வெங்காயம், காய்கறி முதலிய பயிர்ச் செய்கைகளைப் பாதிக்கும் அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி, இலையரிப் புழு ஆகியவற்றை அடியோடு தொலைத்து விடும்.

பொலிடோல் ஒரு சக்திவாய்ந்த சர்வ பூச்சி நாசினி. பயிர்களைப் பாதுகாத்து இலாபத்தைப் பெருக்கும்.

BAYER

மூலப் பொருட்சத்து உற்பத்தியாளர் :
பேயர் ஜெர்மனி.
இலங்கையில் தயாரிப்போர் : ஹேகெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தேவமாதாவின் அமல உற்பவத் திருநாள் இன்று

— நிர்மலா —

இன்று தேவதாய் மாசில்லாமல் உற்பவித்த திருநாள். இறைவனை இவ்வுலகுக்கு அளித்த உத்தமி. செம்மையான மருளின்றித் தோன்றிய நன்நாள். இதி விதுவிலுமுடைய மாதாவே. செம்மையாய் மாசில்லாமல் உற்பவித்த இராக்கினியே என்றெல்லாம் அன்புடனும், ஆவலுடனும் அருசியுடனும் அழைக்கும் நம்சகலருக்கும் அன்னை செம்மையின்றி உற்பவித்த பெண்ணே!

இறைமகன் மனுக்குலத்தை மீட்டு இரட்சிக்க உலகுக்கு வருகை தந்தார். அவரை இவ்வுலகுக்கு அளித்தவள் பரிசுத்த மரியாள். இறைமகனின் தாயாக இருக்க வேண்டுமெனும் காரணத்தினால் இறைவன் சென்மபாவத்திற்கு இலக்காகவில்லை. பாவமனு இறிதுமின்றி பாவத்தின் நிழல்கூட அணுகாத தூய்மையானவளாக மரியாளை படைத்தார் இறைவன். பாவிகள் மத்தியில் அவள் வாழ்ந்தாள். ஆனால் அவள் பாவியல்ல! பாவத்தை நீக்கவல்லவரின் வருகைக்கும் காலாக இருந்த பாவமற்ற தாயவள் கன்னிமை பரிசுத்த மரியாளே. ஆதித்தாய் தந்தை ஆதாமும் ஏவாளும் செய்த கொண்ட பாவத்தின் வழியாக மனுக்குலத்திற்கு உரித்தான சென்ம பாவத்திற்கு பரிசுத்த மரியாளை இறைவன் இலக்காக்கவில்லை இப்பாவமே அணுகாது தடுத்தார்.

தேவதாய் மாசில்லாமல் உற்பவித்த நாள் எனும் வேதசத்தியமானது 1854-ம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டது. ஆயினும் இச்சத்தியத்தை வெளிப்படையாக இக்காலம் வரை எடுத்துக் கூறவிழுனும் அது உள்ளுணர்வாக உணர்த்தப்பட்டது. இதனை உறுதிப்படுத்துவதில் பல போராட்டங்கள் நடந்தன.

“மாசில்லாமல் உற்பவித்தவள்” எனும் வாக்கியம் பொறிக்கப்பட்ட பாரம்பரிக சுத்திகள் ஏற்பட்ட புதுமைகளும் இதனை நிலைநாட்ட ஆவன செய்தது. 9-வது பத்தி போப்பாண்டவராக இருந்த போது இவ்வேத சத்தியமாக உறுதிப்படுத்தப்பட்டது. இதன்படி சகல மேற்றிராணிமாரும், குருமார், மக்களும் கருத்துக்கள் அறியப்பட்டன. சபை தந்தை நிபுணரைக் கொண்ட விசேட குழு அமைக்கப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

சுமார் அறுநூற்றுக்கும் மேற்பட்ட வடிவங்கள் மேற்றிராணிமார்கள் இச்சத்தியத்தை ஏற்பதாகத் தெரியப்படுத்தினர். இதைவிட இக்கருத்தை முன்னிட்டு மக்கள் இறைவனை இரந்து மன்றாடி மதுடன் திவ்விய பலிபூசை ஒப்புக் கொடுத்தும் திவ்விய நற்கருணை உட்கொண்டும் பெற்றும், மாலை பக்தி முயற்சிகளில் ஈடுபட்டனர். உலகின் பலபகுதிகளிலும் இருந்தும் மேற்றிராணிமார் குருமார் ரோமாபுரிக்கு அழைக்கப்பட்டு ஆலோசனை நடாத்தப்பட்டது.

1854-ம் ஆண்டு மார்கழி மாதம் 8-ம் திகதி காலை 8 மணியளவில் வத்திக்கானிலுள்ள சிஸ்டைன் எனும் தேவாலயத்தில் இருந்த போப்பாண்டவரும் கர்தினால்மார், மேற்றிராணிமார் குருமார் ஆகியோரும் குழுமியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களும் ஒருமித்து நின்று வத்திக்கானிலுள்ள புனித இராயப்பர் தேவாலயத்திற்கு ஊர்வலமாகச் சென்றனர். அத்தேவாலயத்தில் இறைவனின் பிரதிநிதியாக இவ்வுலகில் திகழும் போப்பாண்டவர் பரிசுத்த தேவதாய் மாசில்லாமல் உற்பவித்தவள் எனும் சத்தியத்தை பிரகடனப்படுத்தினார்.

1858-ம் ஆண்டு லூர்து நகரில் பர்னதெத்துக்கு காட்சியளித்த தேவதாய் “மாசில்லாமல் உற்பவித்தவள் நானே” என்று கூறிய வார்த்தைகளும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

வட இலங்கை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

திருநாவுக்கரசு, ராஜேஸ்வரி ஜம்புகேஸ்வரர் குருக்கள் [வேதிய வாடம், வயலின்] விசாலாட்சி அம்மா சுந்தரமூர்த்திஐயர், சரோஜினி சுந்தரையா.

பருத்தித்துறை

முதலாம் பிரிவு:
இராசதை ஜெயானந்தகுரு.
இரண்டாம் பிரிவு:
○ வாசுகி சந்திரசேகரம்,
○ ஜெயசுமித்ரா வைரவலிங்கம்,
○ புஷ்பராணி அன்னலிங்கம்,
○ சிவனேஸ்வரி குமாரசிங்கம் [வயலின்]

சாதாரண சித்தி
சாந்திமதி ஆறுமுகம்
○ யோகேஸ்வரி ஆறுமுகம், மாலினி [illegible] சித்திராங்கி சேதுநாதன் சண்முகேஸ்வரி சண்முகநாதன் பாலயோகேஸ்வரி ஆறுமுகம்.

பருத்தித்துறை

சாந்தினி தர்மரட்ணம், நகேசி அற்புதநாதன் [வேதிய வாடம் வயலின்] சர்வானந்தேஸ்வரி சண்முகம்பிள்ளை. புனிதவதி இராசரத்தினம்

சாவகச்சேரி

இரண்டாம்பிரிவு
பத்மினி சுப்பிரமணியம் [வீணை] தேவராணி ஆறுமுகநாதன் [வயலின்] அருட்செல்வி இராசரத்தினம் இந்திரா இராமு.

சாதாரண சித்தி
அனுசூயா இராசையா [வீணை] தேவி சின்னத்தம்பி கலாவல்லி சண்முகநாதன் சரோஜா பஞ்சாட்சரஐயர் விமலாம்பிகை பஞ்சாட்சரஐயர் கனகமணி கனகசபை [வயலின்] ஜீவமலர் சுப்பிரமணியம் [வயலின்] அமிர்தநாதா இராமச்சந்திரன். அம்சத்தொனி இராசரத்தினம் [வயலின்] பத்மாவதி கந்தையா.

(தொடரும்)

மிருதங்க அரங்கேற்றம்

மிருதங்க பேராசிரியர் சங்கீத பூஷணம் ஏ என் இராமநாதனின் புதல்வியான செல்வி மீனாகுமாரி இராமநாதனின் மிருதங்க அரங்கேற்றம் இன்று மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவிருக்கின்றது.

தமிழ் விசாரணைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி உறுப்பினர்கள் குறுக்கீடு ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அரசியல் அமைப்பை வாசிக்காமலே சில உறுப்பினர்கள் அதற்கு வாக்களித்திருக்கின்றனர் என்றார். தமிழில் நீதிமன்ற அலுவல்களை நடத்துவதற்கு அரசியல் அமைப்பு உத்தரவாதமளிக்கவில்லை என்ற அவர் தமக்குச் சாதகமாக அரசியல் அமைப்பின் அந்தப் பகுதியை வாசித்துக் காட்டினார்.

திரு வி என் நவரத்தினம் நீதிமன்ற மொழிப்பிரச்சினை தவிர நீதிமன்றக் கட்டிடங்களின் மோசமான நிலை குறித்தும் எடுத்துக் கூறினார் யாழ்ப்பாணமாகிவிட்ட நீதிமன்றம் மிகப்பழைமையென்றும் மோசமான நிலையிலிருக்கிறதென்றும் அவர் சுட்டிக்காட்டி இதற்கு மாற்றுவழி செய்யப்படவேண்டுமென்றார். நீதிஅமைச்சருடன் (திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா) தமக்கு இருந்துவந்த வருடகாலத் தொடர்பிலே கிடைத்ததென்று கூறிய திரு நவரத்தினம் அவருடைய அறிவும் ஆற்றலும் தகைப்பும் செயற்திறனும் எவரும் பாராட்ட வேண்டியவை என்று புகழ்மாலை சூட்டினார் என்றாலும் அமைச்சுவேலைப்பளு அதிகரித்துவிட்டதென்றும் இவ்வமைச்சுக்களையும் இரண்டாகவும் அவர் கவனிக்க வேண்டியிருக்கிறதென்றும் குறிப்பிட்டு திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் அமைச்சு வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னார் இதுக்கு அவரது ஆற்றல்குறைவு என்று சொல்லவில்லை ஓர் அமைச்சை நிர்வகிக்கும் இலகுவாக்க அவரது நிர்வாகம் சிறப்பாகவே இருக்கிறதென்றும் திரு நவரத்தினம் கூறினார்.

தமிழ் அமைச்சு நிர்வாகங்களில் வழக்குகள் உள்ளதாக இச்சபையில் பலரும் கூறியிருக்கும் இப்போது அந்த வழக்குகள் பற்றி எல்லா அமைச்சு அதிகாரிகளே விசாரணைசெய்யப் போவதாக ஒரு செய்தி கூறுகிறதென்றும் குறிப்பிட்ட திரு நவரத்தினம் லஞ்சஊழல்காரர்களை லஞ்சவிசாரணைக் கமிஷனே விசாரிக்கவேண்டுமென்றார்.

பண்டிதரின் கேள்வி

மாலையில் நேர்ந்த இடைவேளைக்குப்பின்னர் ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசியபோது நீதிமன்றங்களில் தமிழில் அலுவல்கள் நடத்தப்படுவது பற்றிய சர்ச்சை பற்றிக் குறிப்பிட்டார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழில் நீதிமன்ற அலுவல்கள் நடத்தப்படுவதாக பத்திரிகைகளில் அறிக்கைகள் வந்ததென்று குறிப்பிட்ட பண்டிதர் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களுக்கு அனுப்பப்பட்ட தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் பற்றிக் காலம் சென்றதால் நேரமையில் கேட்டகேள்விக்கு நீதி அமைச்சு அளித்த பதிலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல நீதிமன்றங்களுக்கு தமிழ் தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் நியமிக்கப்படவில்லையென்று கூறியிருந்தார். அப்படியானால் இந்த நீதிமன்றங்களில் எப்படித் தமிழில் வழக்குகள் நடந்து பதிவுகள் எப்படித் தமிழில் கைக்கொள்ளமுடியும் என்று கேட்டார். வடக்கிலே இரண்டு கிராம நீதிமன்றங்களிலும் கிழக்கில் இரண்டு கிராம நீதிமன்றங்களிலும் தமிழில் அலுவல்கள் நடைபெறுகின்றன வென்பதுதான் உண்மையென்று திரு. இரத்தினம் கூறினார். நீதி அமைச்சு தமிழைப் புறக்கணிக்கிறதென்று கூறிய ஊர்காவற்றுறைப் பிரதிநிதி தமிழைக் கொண்டு அமைச்சரின்கீழ் நீதி அமைச்சு இப்போது வந்துள்ளதால் இனியும் புறக்கணிப்பு நடைபெறுமென்று நம்பிக்கை தெரிவித்தார். சமாதான நீதவான்கள் தான் இப்போது குவிந்திருக்கிறார்கள் என்று ஊராட்சித் குறிப்பிட்டு சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களே நியமிக்கப்படுவதாகவும் தகுதியானவர்களை நியமியுங்கள் என்று சொன்னார் நல்லிணக்கச்சபைகளுக்கும் தகுதியானவர்களை நியமிக்கும்.

குருநகரில்

1-ம் பக்கத் தொடர்ச்சி

களிலும் திருத்தம் செய்யப்படவேண்டியுள்ளதாகவும், திருத்த வேலை முடிந்ததும் அவ்வீடுகளிலும் சொந்தக்காரர்கள் குடியேறுவார்களென்றும் அவர் கூறினார்

திருத்தமுடியாத நிலையிலுள்ள நான்கைந்து வீடுகளின் உரிமையாளர்கள் அரசாங்க அதிபரிடமும் வேலைக்கூடும் நிவாரணம் கோரியிருப்பதாகத் தெரிகிறது.

கடற்றொழிலாளர்கள், முன்னர்போல் கூட்டாக இல்லை தனித்தனியாக தொழிலுக்குச் சென்றுவருகின்றார்கள் என்றும் விரைவில் முன்னர்போல் கூட்டாகத் தொழிலுக்குச் செல்வார்களென்றும் கடற்றொழிலாளர் ஒருவர் கூறினார்

இன்னமும், பெரிய கடைப்பகுதி சில கடைகள் திறக்கப்பட்டு, வழமைபோல் வியாபாரம் நடைபெற்றுவருகிறது கரையூரைச் சேர்ந்தவர்கள் வழமைபோல் வியாபாரம் செய்வதற்கு ஆரம்பித்தனர்

ஊரடங்கு இன்று முதல் நீக்கப்பட்டாலும், டிசம்பர் 15 ம் திகதிவரை கலவரம் நடந்த பகுதிகளில், ஆயுதந்தரித்த பொலிஸாரும், கலகப் பொலிஸாரும் கடமையாற்றுவார்கள்

சிறிய குற்றங்களுக்காக ரிமாண்டில் வைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலை செய்வது சம்பந்தமாக ஆலோசனை செய்யப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது

ஆனைக்கோட்டை.புதன்

கோழிகளுக்கு நோய் பரவுவதனைத் தடுக்க ஊசி பெறுதியின் உள்ள கோழிகளுக்கு சாவகச்சேரி கால்நடை மருத்துவ வைத்தியர் திரு பொ ஞானசேகரம் ஊசி மருந்துகள் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

எதிரிகள் விடுதலை

காவிட்டிப்பூர், கிழாலி மாதகல் ஆகிய வியாபார வழக்கில் எதிரிகள் மூவரையும் மல்லாகம் நீதிபதி திரு சுந்தரலிங்கம் இன்று விடுதலை செய்தார்

பத்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமான பல அரசியல் சட்டப்பிரச்சினைகள் எழுப்பப்பட்டுள்ளதால் பத்திரிகை மன்றமசோதாவின் இரண்டாம் வாசிப்பை விவாதத்துக்கு எடுக்கும் காலம் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்தில் நாளை தினம் ஆசனங்களிலிருந்து சபாநாயகரைக் கேட்டுக்கொள்வதென்று அவர்கள் முடிவு செய்தனர். இம்முடிவு பற்றி இன்று மசோதாவை சபை நிகழ்ச்சி நிரலிலிருந்து அகற்றுமாறு அவர்கள் கோரியிருக்கின்றனர்.

நாளை (வெள்ளி) காலையில் அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சபாநாயகர் இதுவிஷயமாக சந்தித்து பேசவிருக்கின்றனர்.

(பி ரி ஐ)

ஓய்வு பெறுகிறார்கள்

பண்டிதர் திரு எஸ் நடராசா சுமார் 36 வருடங்களாக ஆசிரியப் பணியில் தன்னை அர்ப்பணித்துவிட்டு அப்பணியிலிருந்து இன்று ஓய்வுபெறுகிறார்.

சமஸ்கிருதம், சைவம், தமிழிலக்கியம் ஆகிய துறைகளில் சிறந்த பாண்டித்தியமும் பயிற்சியும்பெற்றவர். மாணவர்களுக்குப் போதிப்பதோடு மட்டுமல்லாது சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுவதிலும் திறமைமிக்கவர்.

இவர் ஆரம்பத்தில் கொக்குவில் இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினார். இதன்பின்னர் சில ஆண்டுகள் திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் கடமையாற்றிவிட்டு யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் 1919-ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கடமையாற்றிய பண்டிதர் நடராஜா இன்று 28 வருடகாலக் கடமையிலிருந்து ஒய்வு பெறுகிறார்.

திரு. செ. கோவிந்தசாமி

பண்புமிக்க ஆசிரியராகக் கடமையாற்றுவதிலே வே சமூகத்தின் நலன்கருதி பல தொண்டுகள் புரிந்த திரு. செ கோவிந்தசாமி வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இறுதியாகக் கடமையாற்றி இன்று ஓய்வுபெறுகிறார்

இவர் தமது சேவைக்காலத்தில் மாணவர் நலன் கருதி ஓயாது உழைத்துக் கல்லூரியின் தரத்தை உயர்த்தி ஆசிரியர்களதும் மாணவர்களினதும் நன்மதிப்பைப் பெரிதும் பெற்றவர்

ஆற்றலில் சிறந்த திரு கோவிந்தசாமி அடக்கத்தையும் அன்பையும் பெரும் அணிகலன்களாகப் போற்றி வந்துள்ளார் கல்வித்துறைக்கு இவர் இதுவரை ஆற்றிய சேவை காலத்தால் அழியாதது

[illegible]
[illegible]
—ஓர் அறிஞர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

[illegible] 23-ந் திகதி (8-12-72)

தமிழ்நாட்டு அரசியல்

[illegible]

'தமிழ் விசாரணைக்கு அரசியல் அமைப்பில் உத்தரவாதமில்லை''

ஈழம் எம். பி. யின் வாதத்துக்கு சாவகச்சேரி நவம் மறுப்பு

[illegible]

தேசிய பேரவையிலிருந்து

எஸ். எம். கோபாலரத்தினம்

[illegible]

மார்ட்டின் வினாக்கள்

[illegible]

மார்ட்டினுக்கு நவம் பதில்

[illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தார் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி 68 ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.